# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க,

# குடாஉடுவை நாலந்தா அபிவிருத்திச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1993, ஒக்றோபர் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.***

---

*1993, ஒக்றோபர் மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

***இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.***

***கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.***

*விலை : சதம் 60* *தபாற் செலவு : ரூபா 1.00*

## 1993 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, குடாஉடுவை நாலந்தா அபிவிருத்திச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்.

[1993, ஒக்றோபர் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. — ஓ 69/91

குடாஉடுவை நாலந்தா அபிவிருத்திச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.

முன்னுரை.

"குடாஉடுவை நாலந்தா அபிவிருத்திச் சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இலங்கை, குடாஉடுவையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட சங்கமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் ;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, குடாஉடுவை நாலந்தா அபிவிருத்திச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

குடாஉடுவை நாலந்தா அபிவிருத்திச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) குடாஉடுவை நாலந்தா அபிவிருத்திச் சங்கத்தின் தற்போது உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "குடாஉடுவை நாலந்தா அபிவிருத்திச் சங்கம்" என்னும் பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும்; அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) முன்னுதாரண புருஷர்களான பௌத்த பிக்குகள் பரம்பரையைத் தாபித்தல் ;

(ஆ) பௌத்த பிக்குமாருக்கும் பொதுநிலையினருக்குமிடையே நெருங்கிய உறவை வளர்த்து, தார்மீக சமுதாயத்தை உருவாக்குதல்;

(இ) நாட்டு மக்கள் மத்தியில் நிலவும் இன, மத, சாதி பேதங்களைக் களைந்து, தேசிய இன தனித்துவத்துடன் தேசிய ஐக்கியத்தை அபிவிருத்தி செய்தல்;

(ஈ) போதைப்பொருள், மதுப்பழக்கம் என்பவற்றின் ஆபத்துப் பற்றிப் பொதுமக்களுக்கு விளக்கமளிப்பதற்கான நடவடிக்கைகளை மேம்படுத்தல் ;

(உ) உறுப்பினர்களின் கல்வி, பொருளாதார, சமூக, கலாச்சார மேம்பாட்டிற்காக வசதிகளை ஏற்படுத்தல்;

(ஊ) குடாஉடுவை நாலந்தா பிரிவேனையையும் அதனோடு இணைந்த விகாரையையும், கல்வி நிறுவனத்தையும், முன்னேற்றுதலும் பேணுதலும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்; இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல் செயற்படுத்தல் , முடிவுறுத்தல் என்பனவற்றுக்கும், பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பில்லாமல் பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் மானியக்கொடைகளையும், நன்கொடைகளையும் பெறுவதற்கும், அல்லது சேகரிப்பதற்கும் அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய, பதவி தாங்குநர்களையும், விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறும் சொல்லப்பட்ட விதிகளுக்கு இணங்கவும் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டமைந்த நிறைவேற்றுக் குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழு, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் நிறைவேற்றுக் குழுவாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) பொதுக் கூட்டமொன்றிலும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினரில் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு, உறுப்பினரைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்

லது அவர்களை விலக்குதல் என்பவற்றுக்காகவும், நிறைவேற்றுக் குழுவினதும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர், முகவர், சேவையாளர் என்போரினதும் கடமைகள் புரியப்படுவதற்காகவும், அலுவல்களைக் கொண்டுநடாத்துவதில் பின்பற்றவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், அத்துடன் வேறுவகையாக அதன் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்தலும் என்பவற்றுக்காகவும் கூட்டுத்தாபனம் காலத்துக்குக்காலம் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவையாகவிராத விதிகளை ஆக்குதல் அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) அப்போதைக்கு வலுவுள்ளதாயிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதியெதுவும், கூட்டுத்தாபனத்தின் பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினரில் மூன்றில் இரண்டுக்குக் குறையாதோரின் வாக்குகளைக் கொண்டன்றி மாற்றப்படலாகாது, திருத்தப்படலாகாது, நீக்கப்படலாகாது அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாகாது;

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய மாற்றம், திருத்தம், நீக்கம் அல்லது சேர்க்கை எதுவும் நிறைவேற்றுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய பயனுடையதாதலாகாது.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் யாவரும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கூட்டுத்தாபனம் வைத்திருக்கலாம்.*

7. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு மூலம், மானியக் கொடை மூலம், கொடைமூலம், இறுதிவிருப்பாவணக் கையளிப்பு மூலம் அல்லது வேறுவகையில் அதற்குரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாள உள்ள முழுத் தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

*சங்கத்தினால் செலுத்தப்படவுள்ள கடன்களும் சங்கத்துக்குச் செலுத்தப்படவுள்ள கடன்களும்.*

8. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்தியநாளன்று சங்கத்திற்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும்; சங்கத்திற்கு செலுத்தப்படவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படவுள்ள ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் என்பன யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தலைவரினதும் செயலாளரினதும் அல்லது பொருளாளரினதும் முன்னிலையில் அன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது; அவர்கள் சமுகமாயிருந்ததற்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுதலுக்குத் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் மற்றையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.

10. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசின் உரிமைகளையேனும், அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்திற் குறிப்பிட்டவர்களும், அவர்கள் மூலம் அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

11. இச்சட்டத்தில், சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,859 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.